# காட்டு விலங்குகள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

அ

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சிங்கம் | 4 |
| 2 | வரிக்குதிரை | 6 |
| 3 | மான் | 8 |
| 4 | புலி | 10 |
| 5 | ஒட்டகச்சிவிங்கி | 12 |
| 6 | நரி | 14 |
| 7 | காண்டாமிருகம் | 16 |
| 8 | யானை | 18 |
| 9 | சிறுத்தை | 20 |
| 10 | கரடி | 22 |

# சிங்கம்



சிங்கங்கள் குழுக்களாக வாழும். ஒரு கூட்டத்தில் 30 சிங்கங்கள் வரை இருக்கும்.



சிங்கங்களில் பெண் சிங்கங்கள் தான் பெரும்பாலும் வேட்டையாடுகின்றன.



ஆண் சிங்கங்களுக்கு கழுத்தைச் சுற்றி அடர்த்தியான ரோமங்கள் இருக்கும். அதனைப் பிடரி மயிர் என்பர்.



சிங்கங்கள் ஒருநாளில் 16 முதல் 20 மணி நேரம் வரை தூங்கும்.

சிங்கங்கள் தன் நாக்கின் மூலம் தன் உடலைச் சுத்தம் செய்கின்றன.





சிங்கங்களால் தங்கள் கூர்மையான நகங்களை உள்ளிழுக்க முடியும்.

சிங்கம் அடர்ந்த காடுகளை விரும்பாமல் புற்கள் நிறைந்த சமவெளிப் பரப்புகளில் வாழ்வதையே விரும்பும்.





சிங்கங்கள் மான், வரிக்குதிரை மற்றும் காட்டுப்பன்றி போன்ற பெரிய இரையை கூர்மையான பற்கள் மற்றும் நகங்களைப் பயன்படுத்தி வேட்டையாடுகின்றன.

# வரிக்குதிரை



வரிக்குதிரைகள் ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப்படும். இவை மூன்று இனங்களாக உள்ளன. சமவெளி வரிக்குதிரை, கிரெவி வரிக்குதிரை, மலை வரிக்குதிரை.

வரிக்குதிரைகள், சிங்கங்கள், கழுதைப்புலிகள் மற்றும் காட்டுநாய்களால் வேட்டையாடப்படுகின்றன.





வரிக்குதிரைகள் தங்கள் கோடுகளை மறைப்பாகப் பயன்படுத்தி வேட்டையாடும் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது.

வரிக்குதிரை ஒரு நாளுக்கு 10 கிலோ உணவை உண்ணும்.





வரிக்குதிரைகள் சாதாரணமாக ஒரு நாளுக்கு 30 கிலோமீட்டர் வரை பயணிக்கும்.

அவைகளால் தண்ணீரின்றி 3 முதல் 4 நாட்கள் வரை வாழ முடியும்.





ஒரு வரிக்குதிரை 65 கிமீ/மணி வேகத்தில் ஓட முடியும்.

வரிக்குதிரைகள் வெப்பமான காலங்களில் அதிக நேரம் தூங்காமல், இரவில் மேய்ச்சலுக்குச் செல்லும். ஒரு நாளைக்கு சுமார் 12-16 மணி நேரம் வரை மேய்ச்சலில் இருக்கும்.



# மான்



மான்களால் காடுகள், புல்வெளிகள், சதுப்பு நிலங்கள், மலைகள் போன்ற பல்வேறு இடங்களில் வாழ முடியும்.


மான்கள் பொதுவாக சமூக விலங்குகள். இவை மந்தைகளாக வாழ்கின்றன.





மான் குடும்பத்தில் 60 வெவ்வேறு இனங்கள் உள்ளன. அவற்றுள் இந்தியாவில் மட்டும் சுமார் 8 வகையான மான்கள் காணப்படுகின்றன.

ஆண் மான்களுக்கு மட்டுமே கொம்புகள் இருக்கும்.



மான்கள் சுமார் 200 நாட்கள் கர்ப்பமாக இருக்கின்றன.





மான் குட்டிகளுக்கு கொம்புகள் வளர சுமார் மூன்று முதல் ஐந்து மாதங்கள் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் மானின் கொம்புகள் உதிர்ந்து மீண்டும் வளரும். அவை வளரும்போது வெல்வெட் எனப்படும் மென்மையான தோலால் மூடப்பட்டிருக்கும்.





மான்களால் நன்றாக நீந்த முடியும்.



www.worldtamilacademy.com

# புலி

புலிகளில் ஆறு வகையான புலிகள் உள்ளன. அவை வங்காளப் புலி, சைபீரியப் புலி, சுமத்ரா புலி, இந்தோசீனப் புலி, மலாய் புலி, தென் சீனப் புலி.





அதில் இந்தியாவில் காணப்படும் புலி இனம் வங்காளப் புலி ஆகும்.



புலிகள் பெரும்பாலும் அடர்ந்த காடுகளில் தனித்து வாழும்.



புலிகளால் மணிக்கு 65 கிலோமீட்டர் வேகத்தில் ஓட முடியும். அவை ஒரே குதிப்பில் 10 மீட்டர் வரை தாவும்.

புலிகள் தங்கள் உடலை சுத்தமாக வைத்திருக்க அடிக்கடி தங்களை வருடுகின்றன.






ஒவ்வொரு புலியும் தனித்துவமானக் கோடுகளைக் கொண்டுள்ளது.

புலியின் உறுமல் ஒலியானது சுமார் 2 கி.மீ வரை கேட்கும்.






புலியின் கடி திறன் சுமார் 1000 psi (pounds per square inch) ஆகும். இது சிங்கங்களின் கடி திறனை விட மிக அதிகம்.


# ஒட்டகச்சிவிங்கி



ஒட்டகச்சிவிங்கிகள் ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப்படுகின்றன.



ஒட்டகச்சிவிங்கிகள் அகாசியா மரங்களின் இலைகளைச் சாப்பிட விரும்புகின்றன. ஒரு நாளைக்கு சுமார் 34 கிலோகிராம் இலைகளை உண்ணும்.





ஒட்டகச்சிவிங்கிகள் தண்ணீரை குறைவாகக் குடிக்கின்றன.

ஒட்டகச்சிவிங்கிகளின் கழுத்தில் மற்றப் பாலூட்டிகளைப் போலவே ஏழு முதுகெலும்புகள் (செர்விக்கல்) மட்டுமே உள்ளன. அதன் கழுத்து 6 அடிவரை நீளமாக இருக்கும்.



ஒட்டகச்சிவிங்கியின் இதயம் சுமார் 2 அடி நீளமும், 11 கிலோகிராம் எடையும் கொண்டது.






ஒட்டகச்சிவிங்கிகளின் நாக்கு நீல நிறமாக இருக்கும். அது 45 சென்டிமீட்டர் வரை நீளமாக இருக்கும்.

ஒட்டகச்சிவிங்கிகள் நின்று கொண்டே தூங்கும்.





பிறந்த ஒட்டகச்சிவிங்கிக் குட்டி 6 அடி உயரம் இருக்கும்.

# நரி



உலகில் சுமார் 27 வெவ்வேறு வகையான நரிகள் உள்ளன.



நரிகள் இரவில் வேட்டையாடும் விலங்குகள், அதாவது அவை இரவில் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும்.

நரிகள் மணிக்கு 16 கிலோமீட்டர் வேகத்தில் ஓட முடியும்.





நரிகள் 50-60 நாட்கள் கர்ப்பமாக இருக்கின்றன ஒரே நேரத்தில் 2-4 குட்டிகளை ஈனுகின்றன.



நரிகள் 40 வகையான வெவ்வேறு ஒலிகளை எழுப்பும்.

நரிகள் தங்கள் உணவை மென்று சாப்பிடாமல் அப்படியே விழுங்குகின்றன.





நரிகள் ஒற்றையாகவும், சிறிய குழுக்களாகவும் வாழும் பழக்கம் கொண்டவை.

நரிகள் ஆபத்தான சூழ்நிலைகளில் இறந்ததாக பாசாங்கு செய்கின்றன.




# காண்டாமிருகம்



நிலத்தில் வாழும் விலங்குகளில் காண்டாமிருகம் தான் இரண்டாவது மிகபெரிய பாலூட்டி வகையாகும்.


உலகில் ஐந்து வகையான காண்டாமிருகங்கள் உள்ளன: வெள்ளைக் காண்டாமிருகம், கருப்புக் காண்டாமிருகம், இந்தியக் காண்டாமிருகம், ஜாவானியக் காண்டாமிருகம் மற்றும் சுமத்திரக் காண்டாமிருகம்.






இந்தியக் காண்டாமிருகம் ஒரு கொம்பை மட்டுமே கொண்டுள்ளது.

காண்டாமிருகங்கள் தடிமனான தோலுக்குப் பெயர் பெற்றவை. அவற்றின் தோல் 1.5 முதல் 5 சென்டிமீட்டர் வரை தடிமனாக இருக்கும்.



காண்டாமிருகத்தின் பார்வைத்திறன் மிகக் குறைவாகும்.





காண்டாமிருகங்களின் மூளையின் எடை 400-600 கிராம் இருக்கும்.

காண்டாமிருகங்களின் கால்கள் குட்டையானவை. ஆனாலும் மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் அதனால் ஓட முடியும்.





காண்டாமிருகங்கள் தங்கள் உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க சேற்றில் புரள்கின்றன.



www.worldtamilacademy.com

# யானை




யானைகள் ஆப்பிரிக்க யானை, ஆசிய யானை என இரண்டு வகைகளாக உள்ளன. ஆப்பிரிக்க யானைகள் ஆசிய யானைகளை விடப் பெரியவை.



யானைகளுக்கு அதிக நினைவுத்திறன் மற்றும் அறிவுத்திறன் உள்ளது.





யானை 22 மாதங்கள் கர்ப்பமாக இருக்கும். யானைக்குட்டிகள் பிறக்கும் போது சுமார் 100 கிலோ எடையுடன் பிறக்கின்றன.



யானைகளால் தன்னைக் கண்ணாடியில் அடையாளம் காண முடியும்.

யானைகள் குழுக்களாக வாழும். அவற்றுள் பெண் யானைகள் தான் அக்குழுக்களை வழிநடத்துகின்றன.





யானைகள் ஒரு நாளைக்கு சுமார் 16 மணி நேரம் தூங்குகின்றன.

யானையின் மேல் உதடும் மூக்கும் இணைந்ததே தும்பிக்கை ஆகும். இது 40,000 தசைகளானது மற்றும் மிகவும் வலிமையானது.





யானைகள் ஆபத்தான சூழ்நிலைகளில் பிற உயிரினங்களையும் காப்பாற்ற முயற்சிக்கும்.




www.worldtamilacademy.com

# சிறுத்தை




சிறுத்தைகள் மழைக்காடுகள் முதல் பாலைவனங்கள் வரை பல்வேறு வாழ்விடங்களில் வாழக்கூடியவை.



சிறுத்தைகள், மஞ்சள், பச்சை மஞ்சள், கருமையான பழுப்பு போன்ற நிறங்களில் காணப்படுகின்றன.



சிறுத்தையின் கடி திறன், சராசரியாக 300 முதல் 400 psi (pounds per square inch) வரை இருக்கும். இது சிங்கங்கள் மற்றும் புலிகளின் கடி திறனை விடக் குறைவு.



சிறுத்தைகள் ஆப்பிரிக்கா, ஆசியா, இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற இடங்களில் காணப்படுகின்றன.


www.worldtamilacademy.com



சிறுத்தைகள் தங்கள் இரையை மரங்களில் மறைத்து வைக்கும்.

தண்ணீர் இன்றி 10 நாட்கள் வரை உயிர் வாழும் உயிரினம் சிறுத்தையாகும்.

சிறுத்தைகளால் மரங்களில் ஏறவும், பாறைகளில் ஏறவும், தண்ணீரில் நீந்தவும் முடியும்.

சிறுத்தைகள் மான், காட்டுப்பன்றி, குரங்குகள், பறவைகள் போன்ற பல்வேறு வகையான இரையை வேட்டையாடுகின்றன.

# கரடி




கரடிகள், வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆர்டிக் பகுதிகளில் காணப்படுகின்றன.



கரடிகள் மனிதர்களைப் போல இரட்டைக் கால்களில் நின்று செல்வதற்கும் பழக்கப்பட்டவை.



உலகில் 8 முக்கியமான கரடி இனங்கள் உள்ளன. அவை: துருவக் கரடி, பழுப்புக் கரடி, அமெரிக்கக் கருப்பு கரடி, ஆசியக் கருப்பு கரடி, சிறுத்தைக் கரடி, சூரியக் கரடி, கண்ணாடிக் கரடி, ராட்சதப் பாண்டா.



கரடிகள் மனிதர்களை விட 100 மடங்கு அதிக வாசனையை உணரும் திறன் கொண்டது.



www.worldtamilacademy.com

குளிர்கால நீண்ட உறக்கத்தின்போது, அவை உணவின்றி உயிர்வாழ முடியும்.





பெண் கரடிகள் பொதுவாக 6 முதல் 9 மாதங்கள் வரை கர்ப்பமாக இருக்கும். ஒன்று முதல் மூன்று குட்டிகள் வரை ஈனுகின்றன.

கரடிகள் செரிமானத்திற்காக சிறு கற்களை விழுங்கும்.







கரடிகளுக்கு கூர்மையான நகங்கள் மற்றும் பற்கள் உள்ளன.



www.worldtamilacademy.com



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com